# தேசிய வெளிக்கள நிலையம் தொண்டைமானாறு

ஐந்தாம் தவணைப் பரீட்சை - 2024

# National Field Work Centre, Thondaimanaru.

5th Term Examination - 2024

| தரம் :- 13 (2024) | பொருளியல் | புள்ளித்திட்டம் |
|---|---|---|

பகுதி I

| இல | விடை | இல | விடை | இல | விடை | இல | விடை | இல | விடை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | 2 | 11 | 1 | 21 | 3 | 31 | 4 | 41 | 5 |
| 02 | 3 | 12 | 5 | 22 | 4 | 32 | 3 | 42 | 3 |
| 03 | 4 | 13 | 2 | 23 | 2 | 33 | 3 | 43 | 3 |
| 04 | 2 | 14 | 3 | 24 | 2 | 34 | 3 | 44 | 1 |
| 05 | 3 | 15 | 1 | 25 | 1 | 35 | 2 | 45 | 3 |
| 06 | 1 | 16 | 2 | 26 | 4 | 36 | 3 | 46 | 4 |
| 07 | 4 | 17 | 5 | 27 | 3 | 37 | 2 | 47 | 3 |
| 08 | 2 | 18 | 1 | 28 | 1 | 38 | 4 | 48 | 1 |
| 09 | 5 | 19 | 5 | 29 | 1 | 39 | 5 | 49 | 5 |
| 10 | 5 | 20 | 5 | 30 | 2 | 40 | 2 | 50 | 2 |

(2x50 = 100 புள்ளிகள்)

01.

(1)

- சமூகத்தின் அளவற்ற விருப்பங்களுடன் ஒப்பிடுகையில் வரையறுக்கப்பட்ட நிரம்பலைக் கொண்டுள்ள உற்பத்தி வளங்கள் பொருளாதார வளங்களாகும். (1புள்ளி)
- பொருளாதார வளங்களுக்கு அருமைத் தன்மையும் மாற்றுப் பயன்பாடும் காணப்படுவதனால் பொருளாதார வளப்பயன்பாட்டின் போது அமையச் செலவு தோன்றும். (1புள்ளி)
- பொருளாதார வளங்களை குறித்த நோக்கத்திற்காகப் பயன்படுத்தும் போது வேறொரு நோக்கத்திற்காக அவற்றை பயன்படுத்துவதை விட்டுக் கொடுக்க வேண்டும். எனவே பொருளாதார வளங்களுக்கு அமையச் செலவு தோன்றும். (1புள்ளி)
- நிலம், உழைப்பு, மூலதனம் மற்றும் முயற்சி என்பன பொருளாதார வளங்களாகும். (1புள்ளி)

(2) அ)

A பொருளாதார முறை - விலைப்பொறிமுறை (1 புள்ளி)

B பொருளாதார முறை - கட்டளைப் பொறிமுறை / மத்திய திட்டமிடல் குழு (1புள்ளி)

ஆ)

- A பொருளாதார முறைமை சந்தைப் பொருளாதார முறைமையாக காணப்படுவதனால் ஒப்பீட்டு ரீதியில் கூடிய இலாபம் தரக்கூடிய பொருள் அல்லது சேவைகள் உற்பத்தியை நோக்கிய வள ஒதுக்கீடு இடம்பெறும்.

  சந்தைப் பொருளாதாரம் ஒன்றில் வள ஒதுக்கீடு பற்றிய முழுச் செயன்முறைக்கும் அடிப்படையாக அமைவது விலைகளின் வகிபாகமாகும். (1புள்ளி)



kalvi.lk

- B பொருளாதார முறைமை கட்டளைப் பொருளாதார முறைமையாகக் காணப்படுவதனால் வள ஒதுக்கீடு பற்றிய தீர்மானங்கள் மத்திய அதிகார சபையினால் மேற்கொள்ளப்படும். *(1புள்ளி)*

  பண்டங்களை ஒதுக்கீடு செய்யும் திட்டமிடலானது அரசாணையின் மூலம் மேற்கொள்ளப்படும். உதாரணமாக பங்கீட்டுத்திட்டத்தின் மூலமாகும். (1 புள்ளி)

(3)

- ஊழியப்பிரிவு என்பது குறிப்பிட்ட ஒரு பொருளின் உற்பத்தி செயன்முறையை பல்வேறு கட்டங்களாகப் பிரித்து ஒரு சில தொழிலாளர்கள் ஒரு கட்டத்திலும் ஏனையோர் வேறு கட்டங்களிலும் ஈடுபடுவதை குறிக்கும். *(1புள்ளி)*
- ஊழியப்பிரிவு மூலம் தொழிலாளர்களுக்கு சிறப்புத் தேர்ச்சி ஏற்படுகின்றது. குறிப்பிட்ட குறுகலான ஒரு வேலையால் மட்டும் சிறக்குமியல்பு பெறும் ஒரு தொழிலாளி காலப் போக்கில் அவ்வேலையில் கூடிய அனுபவத்தைப் பெற்றுக் கொள்வதோடு அதில் சிறந்த வினைத்திறனையும் பெற்றுக் கொள்கிறார். இதன் மூலம் தொழில் நிறுவனங்கள் ஊழியரது உற்பத்தித் திறனை உயர்த்திக் கொள்வதோடு உயர்ந்த வெளியீட்டு மட்டங்களையும் அடையக் கூடியதாகவிருக்கும்.
- தொழிற்பிரிப்பும், சிறக்குமியல்பும் உற்பத்தியில் உயர் தொழினுட்பங்களை அறிமுகம் செய்வதற்கு உதவும். *(1புள்ளி)*
- தொழிற்பிரிப்பானது புதிய கண்டுபிடிப்புக்களையும் புதுமைகளையும் ஊக்குவிக்கின்றன. *(1புள்ளி)*
- இது புதிய ஒரு இயந்திரத்தை அல்லது கருவியை கண்டுபிடிக்க உதவுகிறது.
- தொழிலாளி தான் செய்யும் வேலையை அடிக்கடி மாற்றிக் கொள்ளாததாலும் இடத்துக்கிடம் செல்ல வேண்டிய தேவை இல்லாதிருப்பதாலும் வேறுபட்ட இயந்திரங்களையும் கருவிகளையும் கையாள வேண்டிய தேவை இல்லாதிருத்ததாலும் காலம் ($Time$) சேமிக்கப்படுகிறது. *(1புள்ளி)*

  இதனால் உற்பத்தியின் வேகம் அதிகரிப்பதுடன் உற்பத்திச் செலவுகளும் வீழ்ச்சியடைகிறது. பேரளவு உற்பத்திகள் இடம்பெறவும் வர்த்தகம் வளரவும் உதவுகின்றது.


*(4)*

- பொருளாதாரமொன்று நிகழ்கால மூலதனவாக்கத்தின் பொருட்டு விட்டுக் கொடுக்கும் நிகழ்கால நுகர்வின் அளவாலேயே பெரும்பாலும் அப் பொருளாதாரத்தின் எதிர்கால வளர்ச்சி வேகம் தீர்மானிக்கப்படும்.
- நிகழ்காலத்தில் பொருளாதாரத்தின் வளங்களின் பெரும்பகுதி சார்பளவில் மூதலீட்டுப் பொருள்களின் உற்பத்தியில் ஒதுக்கிடப்படுமாயின், பொருளாதாரத்தின் உற்பத்தி இயலளவு விரிவாக்கமடைந்து எதிர்கால சாத்திய வெளியீடு கணிசமான அளவு கூடிய வளர்ச்சி வீதத்தை அடைய முடியும். அப்பொருளாதாரத்தின் உற்பத்தி இயல்தகவு வளையியானது நிகழ்கால உற்பத்தி வளையியிலிருந்து வலப்புறமாக மிகப் பெரியளவு தூரத்திற்கு இடம் பெயரும். *(1புள்ளி)*
- மறுபுறம் நிகல்காலத்தில் நுகர்வுக்காக வளங்களை அதிகளவு ஒதுக்கீடு செய்யப்படுமாயின் அப் பொருளாதாரத்தின் எதிர்கால உற்பத்தி இயல்தகவு வளர்ச்சி வீதம் மிகவும் சிறியதாக இருக்கும்.




kalvi.lk

- எதிர்கால உற்பத்தி இயல்தகவு வளையியானது வலப்புறமான நகர்ந்தாலும் மிகச்சிறிய தூரத்திற்கே இடம் பெயரும். *(1புள்ளி)*




*(1புள்ளி)*




*(1புள்ளி)*

*(5)* ◆ உற்பத்தி தானத்தக்கு குழிவு வடிவான உற்பத்தி சாத்திய வளையி

அல்லது

- ◆ அதிகரிக்கும் அமையச் செலவு *(1புள்ளி)*
- ◆ அதிகரித்துசெல்லும் அமையச் செலவு என்பது உற்பத்தி இயல்தகவு வளையியின் வழியே ஒரு பொருளின் உற்பத்தியை சம அலகுகளால் படிப்படியாக அதிகரிக்கும் போது அதன் பொருட்டு விட்டுக்கொடுக்கவேண்டியுள்ள மற்றைய பொருளின் அமையச் செலவு படிப்படியாக அதிகரிக்கும் என்பதாகும். *(2புள்ளி)*
- ◆ அதிகரிக்கும் அமையச் செலவு காணப்படுவதனால் உற்பத்தி சாத்திய வளையி உற்பத்தி தானத்துக்கு குழிவு வடிவானதாக காணப்படும். *(1புள்ளி)*

*02. (1)* குறிப்பிட்ட காலத்தில் குறித்த பொருளின் விலை தவிர்ந்த ஏனைய காரணிகள் மாறாத போது குறித்த பொருளின் விலைக்கும் அதன் கேள்வி தொகைக்கும் இடையில் எதிரான தொடர்பு காணப்படுதல் கேள்வி விதி ஆகும். *(1புள்ளி)*

இதற்கு காரணமாக அமைவது

வருமான விளைவு

பதிலீட்டு விளைவு

ஏனையவை மாறாத நிலையில் பொருளின் விலை மாற்றம் காரணமாக மெய்வருமானத்தில் ஏற்படும் மாற்றத்தினால் கேள்வித்தொகை மாற்றமடைதல் வருமான விளைவாகும். *(1புள்ளி)*

$P\uparrow \longrightarrow$ மெய்வருமானம் $\downarrow \longrightarrow Qd\downarrow$

$P\downarrow \longrightarrow$ மெய்வருமானம் $\uparrow \longrightarrow Qd\uparrow$ *(1புள்ளி)*



kalvi.lk


பதிலீட்டு விளைவு என்பது ஏனையவை மாறாத போது சார்பு விலை மாற்றம் காரணமாக கேள்வித் தொகை மாற்றடைதல் பதிலீட்டு விளைவாகும்.

$P\uparrow \longrightarrow$ சார்பு விலை$\uparrow \longrightarrow Qd\downarrow$

$P\downarrow \longrightarrow$ சார்பு விலை$\downarrow \longrightarrow Qd\uparrow$ (1புள்ளி)

(2) தேயிலைக்கான கேள்விக் கோட்டில் வலப்புறநகர்வை ஏற்படுத்தும் காரணிகள்
1. குறித்த பொருளின் சுவை கூடுதல்.
2. பதலீட்டுப்பண்டங்களின் விலை அதிகரித்தல்
3. இணைப்பு பண்டத்தின் விலை குறைவடைதல்
4. நுகர்வோரின் எதிர்காலத்தில் விலை கூடும் எனும் எதிர்பார்க்கை


(ஏதாவது 2 எழுதினால் 1 புள்ளி)




(வரைபடம் 1புள்ளி)

கேள்விக்கோட்டில் இடப்புற நகர்வை ஏற்படுத்தும் காரணிகள்.
1. குறித்த பண்டத்தின் சுவை குறைவடைதல்.
2. பதிலீட்டு பண்டத்தின் விலை குறைவடைதல்.
3. பதிலீட்டு பண்டத்தின் விலை அதிகர்த்தல்.
4. எதிர்காலத்தில் விலை குறையும் என நுகர்வோர் எதிர்பார்த்தல்.

(ஏதாவது 2 எழுதினால் 1 புள்ளி)




(வரைபடம் 1புள்ளி)



kalvi.lk

(3) $X$ பொருள் - கிபன்பண்டம்


$X$ உம் $Y$ உம் - பதிலீட்டுப்பண்டம்

$Z$ பொருள் - இழிவுப் பண்டம்

$W$ பொருள் - சாதாரண பண்டம் (அத்தியாவசியப் பண்டம்)

(4)

| $P$ | $Qd$ | $QS$ |
|---|---|---|
| 10 | 1000 | 200 |
| 50 | 200 | 1000 |




(வரைபடம் 1புள்ளி)

1. சமநிலை விலை ரூ.30.
   சமநிலை தொகை 600 அலகுகள் (1புள்ளி)

2. $PES = \frac{\triangle QS}{\triangle P} \times \frac{P}{QS}$ (1புள்ளி)

   $= \frac{800}{40} \times \frac{10}{200} = 1$ (1புள்ளி)

3.

| $P$ | $QS$ |
|---|---|
| 0 | 200 |
| 40 | 1000 |

மானிய செலவு = அலகுமானியம் × புதிய சமநிலை தொகை

$= 10 \times 800$

= ரூ.8000 (2புள்ளி)



kalvi.lk

சமூகநலன் இழப்பு $= \frac{1}{2} \times 5 \times (800 - 600)$

$= \frac{1}{2} \times 5 \times 200$

$=$ ரூ.500 *(2புள்ளி)*


03. *(1)* விலைக்கும் கேள்வித் தொகைக்கும் இடையில் நேர்க்கணியத் தொடர்பு காணப்படும் பண்டங்கள் கிபன் பண்டங்களாகும். *(1புள்ளி)*

வருமானத்துக்கும் வேள்விக்கும் இடையில் எதிரான தொடர்பு காணப்படும் பண்டங்கள் இழிவுப் பண்டங்களாகும். *(1புள்ளி)*


கிபன் பண்டம் - எதிர்க்கணிய பதலீட்டு விளைவை விட எதிர்கணிய வருமான விளை பலமாக காணப்படும். *(1புள்ளி)*


இழிவுப்பண்டம் - எதிர்க்கணிய வருடமான விளைவை விட எதிர்க்கணிய பதிலீட்டு விளைவு பலமாக காணப்படும். *(1புள்ளி)*

*(2)*




*(2புள்ளி)*

 நுகர்வோர் தாங்கும் வரி

 உற்பத்தியாளர் தாங்கும் வரி

நெகிழ்வற்ற கேள்வி நெகிழ்ச்சியுடைய பண்டங்களுக்கு அரசு வரி விதிக்கம் போது வரிச்சுமையின் பெரும் பகுதியை நுகர்வோர் தாங்குவார். *(2புள்ளி)*

*(3)*



kalvi.lk

(4) 1. சமநிலையில் $Qd = Qs$

$50 - 5P = -10 + 5P$

$60 = 10P$

$\frac{60}{10} = P$

$6 = P$

$Qd = 50 - 5P$

$= 50 - 5 \times 6$

$= 50 - 30$

$= 20$

சமநிலை விலை =ரூ. 6.00 - (1புள்ளி)

சமநிலை தொகை = 2- அலகுகள் - (1புள்ளி)

2. $CS = \frac{\text{ஆக்ககூடிய கேள்விலை - சமநிலை விலை}}{2} \times$ சமநிலை தொகை

$= \frac{10-6}{2} \times 20$

$= \frac{4}{2} \times 20$

=ரூ. 40.00 ($\frac{1}{2}$புள்ளி)

$PS = \frac{\text{சமநிலை விலை - ஆகக்குறைந்த நிரம்பல் விலை}}{2} \times$ சமநிலை தொகை

$= \frac{6-2}{2} \times 10$

=ரூ. 40.00 ($\frac{1}{2}$புள்ளி)

$ES = CS + PS$

$= 40 + 40$

=ரூ 80.00 (1புள்ளி)

உத்தரவாத விலை ரூ 8 எனின்

$Qd = 50 - 5 \times 8$

$= 50 - 40$

$= 10$ அலகுகள்

$Qs = -10 + 5P$

$= -10 + 5 \times 8$

$= 10 + 40$

$= 30$ அலகுகள்

| |
|---|
| HDP |
| Qd = 50-5P |
| 0 = 50-5P |
| SP= 50 |
| P= 50/5 |
| = 10 |
| MSP |
| QS = -10+5P |
| 0 = -10+5P |
| 10 = JP |
| 2=P |

3. (1) குறைநிரப்பு கொடுப்பனவு

$= (8 - 4) \times 30$

$= 4 \times 30$

=ரூ. 120 (2புள்ளி)



kalvi.lk

(2) நுகர்வோன் மிகை அதிகரிப்பு

$= \frac{1}{2} \times (30 + 20) \times 2$


$= \frac{1}{2} \times 50 \times 2$

=ரூ. 50 (1புள்ளி)

(3) உற்பத்தியாளர் மிகை அதிகரிப்பு

$= \frac{1}{2} \times (30 + 20) \times 2$

=ரூ 50 (1புள்ளி)




04. (1)

குறுங்கால செலவு வளையிகளின் வடிவம் $U$ வடிவில் காணப்படுவதற்கு காரணம் குறைந்து செல்லும் எல்லை விளைவு விதி தொழிற்படுவதாகும்.
குறைந்து செல்லும் எல்லை விளைவு விதி என்பது.

- நிலையான உள்ளீடுகளின் தொகையுடன் ஒரு மாறும் உள்ளீட்டினை அதிகமாகப்பயன்படுத்தும் போது மாறும் உள்ளிட்டின் எல்லை உற்பத்தியும் சராசரி உற்பத்தியும் படிப்படியாக வீழ்ச்சியடைவதைக் குறிக்கும். (1புள்ளி)
- குறுங்கால செலவு வளையாகளான எல்லை செலவு வளையி ($MC$) மற்றும் $AVC$ வளையிகள் $U$ வடிவத்தில் காணப்படும் அதேவேளை $MP$ மற்றும் $AP$ வளையிகள் தலைகீழ்ப்படுத்தப்பட்ட $U$ வடிவத்தில் காணப்படுகின்றன. (1புள்ளி)
- $MP$ அதன் உச்சத்தில் காணப்படும் போது $MC$ அதன் அதிதாழ்ந்த புள்ளியில் காணப்படும் மாறும் உள்ளீடு மேலும் அதிகரிக்கையில் $MP$ வீழ்ச்சியடைவதுடன் $MC$ அதிகரிக்கின்றது. (1புள்ளி)
- ஆனால் $Ap$ தொடர்ந்தும் அதிகரிப்பதுடன் $AVC$ தொடர்ச்சியாக வீழ்ச்சியடைகின்றது. $Ap$ உச்ச நிலைக்கு அதிகரித்துஅதன் பின்பு வீழ்ச்சியடைகின்றது. $AVC$ ஆனது அதி தாழ்ந்த மட்டத்திற்கு வீழ்ச்சியடைந்து அதன் பின்னர் அதிகரிக்கின்றது. (1புள்ளி)
- எனவே குறுங்கால செலவு வளையிகளின் வடிவம் $U$ வடிவாவ காணப்படும்.

(2) அ) சராசரி மொத்த செலவை ($ATC$) அதிகரிக்கின்றது. சராசரி நிலையான செலவு ($ATC$) மாறாது.

ஆ) சராசரி மொத்த செலவு ($ATC$) வீழ்ச்சியடைகின்றது, $AFC$ வீழ்ச்சி

இ) ATC அதிகரிக்கின்றது.
AFC மாற்றமடைவில்லை.

ஈ) ATC அதிகரிக்கின்றது.
AFC அதிகரிக்கின்றது.

(3) சாதாரண இலாபம் என்பது நிகழ்காலப் பாவணையால் தனது சேவை கிடைக்கத்தக்கதாக இருப்பதற்கு முயற்சியாளர் பெற்றுக் கொள்ள எதிர்பார்க்கும் குறைந்தபட்ச கொடுப்பனவு ஆகும். (2புள்ளி)
இது நிறுவனத்தில் முயற்சியாண்மை செயற்பாடுகளை ஆற்றுவதற்காகச் செய்யப்படும் கொடுப்பனவாக இருப்பதனால் சாதாரண இலாபம் என்பது நிறுவனத்தினுடைய ஓர் உள்ளார்ந்த செலவாக காணப்படும். (2புள்ளி)
எனவே சாதாரண இலாபம் ஓர் செலவாக கருதப்படுகின்றது.



kalvi.lk

(4) 1. நிறைபோட்டி சந்தை (1புள்ளி)
2. தனியுரிமை போட்டிச்சந்தை (1புள்ளி)
3. தனியுரைமை சந்தை (1புள்ளி)
4. சிலலுரிமை சந்தை (1புள்ளி)

(5) 1) மொத்த வருமானம் $(TR)$ $= P \times Q$
$= 50 \times 1000$
=ரூ.50000 (1புள்ளி)

மொத்த செலவு $(TC)$ $= ATC \times Q$
$= 80 \times 1000$
$= 80000$ (1புள்ளி)

பொருளியல் இலாபம் $= TR - TC$
$= 50000 - 80000$
$= -30000$

∴பொருளியல் நட்டம் = ரூ 30000 (1புள்ளி)

2) நிறுவனத்தின் மொத் வருமானம் மொத்த மாறும் செலவை ஈடுசெய்ய போதுமானதாக உள்ளபோது நிறுவனம் தொடர்ந்து உற்பத்தியை மேற்கொள்ளும்.

$TVC = AVC \times Q$ $\qquad AVC = ATC - AFC$
$= 60 \times 1000$ $\qquad = 80 - 20$
=ரூ.60000 $\qquad = 60$ (1புள்ளி)

ஆனால் இங்கு மொத்த வருமானத்தை $(TR)$ விட மொத்த மாறும் செலவு $TVC$ அதிகமாக காணப்படுவதனால் நிறுவனம் தொழிலை விட்டு வெளியேறும்.


$TVC > TR$
$60000 > 50000$ (1புள்ளி)

05. (1)

- பணவீக்க இடைவெளி என்பது நிறை தொழில்மட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தியில் அந்நிறை தொழில் மட்டத்தை அடையத் தேவையான அளவை விட பொருளாதாரத்தின் மொத்த செலவுகள் கூடுதலாக உள்ள அளவினால் காட்டப்படும். (நிறை தொழில்மட்ட வெளியீட்டை விட மொத்தக் கேள்வி மட்டம் அதிகமாக இருத்தல்.) (1புள்ளி)
- பணச்சுருக்க இடைவெளி என்பது நிறை தொழில்மட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தியில் அதனை அடையத்தேவையான அளவை விட பொருளாதாரத்தின் மொத்தச் செலவீடுகள் எந்தளவினால் குறைவாக உள்ளது எனபதைக் காட்டும். (நிறை தொழில் மட்ட வெளீட்டை விட மொத்தக் கேள்வி குறைவாக இருத்தல்.) (1புள்ளி)
- பணவீக்க இடைவெளியின் காரணமாக (மிகைச் செலவீனங்கள்) வெளியீடுகளின் விலைகள் உயரும் வியாபார முயற்சிகள் மிகைச் செலவீனங்களுக்கு ஏற்ப தமது வெளியீட்டை விரிவாக்கம் செய்ய முடியாத காரணத்தால் கேள்வித் தூண்டல் பணவீக்கம் ஏற்படும். உயர்ந்த விலைமட்டம் காரணமாக பெயரளவு மொத்த உள்நாட்டு உற்பத்தி அதிகரிக்கின்றது. (1புள்ளி)
- பணச்சுருக்க இடைவெளியின் காரணமாக (செலவீனப் பற்றாக்குறை) அது பொருளாதாரத்தை சுருக்கச் செய்வதனால் பொருளாதாரத்தின் வேலையின்மை அதிகரிக்கும் மெய்வருமானமும் வீழ்ச்சியடையும். (1புள்ளி)



kalvi.lk




(2) ◆ உள்நாட்டு சேமிப்பு

a) வீட்டுத்துறை சேமிப்பு
b) நிறுவன சேமிப்பு
c) அரசசேமிப்பு

*2புள்ளி*

◆ வெளிநாட்டு சேமிப்பு

a) தேறிய வெளிநாட்டு முதனிலை வருமானம்
b) தேறிய வெளிநாட்டு இரண்டாம் நிலை வருமானம்

*2புள்ளி*

(3) அ) தேசிய சேமிப்பு=மொத்த தேசிய உற்பத்தி - (தனியார்நுகர்வு +அரச கொள்வனவு)

$15000 = GNP - (8000 + 5500)$

$15000 = GNP - 13500$

$18500 = GNP$

$GNP = 18500$ *(1புள்ளி)*

- $GNP = GDP +$தேறிய வெளிநாட்டு முதன்மை வருமானம்

$18\,500 = GDP + 2000$

$18\,500 - 2000 = GDP$

$16\,5000 = GDP$

$GDP = 16500$

- மொத்த உள்நாட்டு உற்பத்தி $= C + I + G + NX$

$GDP = 8000 + I + 5500 + (5000)$

$16\,500 = 8500 + I$

$16\,500 - 8500 = I$

$8500 = I$ *(1புள்ளி)*

- தேறிய முதலீடு = மொத்த முதலீடு - நிலையா முலதன நுகர்வு

$= 8000 - 1000$

$= 7000$ *(1புள்ளி)*

ஆ) சந்தை விலை செலவிடத்தக்க

மொத்த தேசிய உற்பத்தி $= GNP +$ தேறிய வெளிநாட்டு இரண்டாம் நிலை வருமானம்

$= 18\,500 + 4000$

= ரூ. 22 500 *(1புள்ளி)*

(4) அ) $Y = C + I + G$

$Y = 900 + 0.6(y - 100) + 200 + 300$ *(1புள்ளி)*

$Y = 900 + 0.6\,y - 60 + 500$

$Y = 1340 + 0.6y$

$Y - 0.6y = 1340$

$0.4y = 1340$

$Y = 1340/0.4$

$Y = 3350$ மில்லியன் ரூபா *(1புள்ளி)*

ஆ) $\Delta Y = \Delta G \times K$

$= 50 \times 2.5$

$= 125$

இ) $K_G = \frac{1}{MPS}$

$= \frac{1}{0.4}$

$= 2.5$



kalvi.lk

ஈ) $Y = 3350$

$Y_F = 4000$

$\Delta Y = 650$

$K_G = 2.5$

$\Delta Y = \Delta G \times K_G$

$650 = \Delta G \times 2.5$ (1புள்ளி)

$\frac{650}{2.5} = \Delta G$

$\Delta G = 260$ (1புள்ளி)

∴ அரசாங்கசெலவு 260 ரூபாவால் அதிகரிக்க வேண்டும்.


**உப பிரிவு "ஆ"**

06. (1)

- ஒரு நாட்டின் பொது விலைமட்டத்தில் உண்மையாக ஏற்படும் அதிகரிப்பு வெளிப்படையான பணவீக்கமாகும். (1புள்ளி)
- இது பொருட்களின் சேவைகளின் தற்காலிக விலை அதிர்ச்சிகளின் தாக்கங்களை உள்ளடக்கியதாக காணப்படும். (1புள்ளி)
- ஒரு நாட்டின் வெளிப்படையான பணவீக்கத்தில் காணப்படும் நிரம்பல் அதிர்ச்சிகள் போன்ற தற்காலிக விலைத்தளம்பல்களை நீக்கும் பொருட்டு சில வகைப்பொருட்களின் விலைகளை நீக்கி கணிப்பிடப்படும் பணவீக்கம் அடிப்படைப் பணவீக்கமாகும். (1புள்ளி)
- சர்வதேச நியமங்களின் அடிப்படையில் இலங்கையில் உணவு, எரிபொருள் போன்ற அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் நீக்கப்பட்டு இது கணிப்பிடப்படுகின்றது (1புள்ளி)

(2) உத்தேச நோக்க பணக்கேள்விக்கும் வடடி வீதத்திற்கும் இடையில் எதிரான தொடர்பு காணப்படும். அதாவது வட்டி வீதம் நிகழ்காலத்தில் குறைவாக இருப்பின் எதிர்காலத்தில் வட்டி வீதம் உயரும் என எதிர்பார்த்து உத்தேச நோக்க பணக்கேள்வியை கூட்டுவார். (1புள்ளி)

மாறாக வட்டி வீதம் நிகழ்காலத்தில் உயர்வாக இருப்பின் எதிர்காலத்தில் வட்டி வீதம் குறைவடையும் என எதிர்பார்த்து உத்தேச நோக்க பணக் கேள்வியைக் குறைப்பார். (1புள்ளி)




(1புள்ளி)



kalvi.lk

படத்தில் வட்டி வீதமானது $r1$ஆக அதிகரிக்கும் போது பணத்துக்கான கேள்வி $m1$ குறைவடைகின்றது . வட்டி வீதம் $r2$ ஆக குறைவடையும் போது பணத்துக்கான கேள்வி அதிகரிக்கும். *(1புள்ளி)*

*(3)*

- பணத்தின் பெறுமதி அல்லது கொள்வனவு சக்தி வீழச்சியடையும்.
- பணவீக்கத்தால் பெயரளவு வட்டிவீதம் அதிகரத்து முதலீட்டுக்கான செலவுகள் அதிகரிக்கும்.
- தொழிற்சங்க நடவடிக்கைகள் அடிக்கடி இடம் பெறுவதானால் நாட்டில் நிலையற்ற பொருளாதார சூழல் ஏற்படும்.
- நாணய மாற்று வீதப் பெறுமதி வீழச்சியடையும்.
- வருமான பங்கீடு நியாயமற்ற விதத்தில் இடம் பெறும்.
- முழு வறுமை நிலை அதிகரிக்கும்
- கடன் பட்டோர் நன்மையார், கடன் கொடுத்தோர் பாதிக்கப்படுவார்கள்
- பட்டியல் செலவு (Menu cost) சப்பாத்து தோல் செலவு (shoe leather cost) அதிகரிக்கும்.

*(ஏதாவது 4 எழுதினால் 4 புள்ளி)*

*(4)* காலதாமதம் இன்றி முதல் நட்டமின்றி பணமாக மாற்றிக் கொள்ளக் கூடிய சொத்துக்கள் கிட்டிய பணமாகும்.

இவை பெறுமாக திரட்டாக தொழிற்படுகின்ற ஆனால் பரிமாற்றூடகமாக தொழிற்படாத பணத்தை அது குறிக்கும் *(2புள்ளி)*

(உ+ம் சேமிப்பு நிலையான வைப்புக்கள் உண்டியல்கள்)

ஆனால் பணப்பதிலீடு என்பது பெறுமானத்திரட்டாக தொழிற்படும் அதேவேளை பரிமாற்றூடகமாக தொழிற்படாது

(உ+ம் கடனட்டை)

*(5)* பொருளாதாரத்தில் இடம்பெறும் பணநிரம்பலுக்கு அடிப்படையாக அமையும் பணவியல் சொத்துக்கள் உயர்வலுப்பணமாகும்.

இவை மத்திய வங்கியின் நேரடிப் நிதிப் பொறுப்புக்களாகும். *(1புள்ளி)*

**<u>தீர்மானிக்கும் காரணிகள்</u>**

- பொதுமக்களிடம்புழக்கத்தில் உள்ள பணம்
- வணிக வங்கியிடம் உள்ள பணம்
- மத்தியவங்கியிடம் உள்ள வணிக வங்கியின் வைப்புக்கள்
- மத்திய வங்கியிடமுள்ள அரச முகவர்களின் வைப்புக்கள். *(1புள்ளி)*



kalvi.lk

07. (1) • முதன்மை தொழிற்பாடுகள்

* நாணயக் கொள்கையை நடைமுறைப்படுத்தல்.
* செலாவணிவத கொள்கையினை நடைமுறைப்படுத்தல்.
* இலங்கையின் வெளிநாட்டு அலுவல்சார் ஒதுக்களை முகாமைப்படுத்தல்.
* நிதியியல் முறைமை மேற்பார்வை.
* தேசிய நாணயங்களை வெளியிடுதல். விநியோகித்தல்.

ஏதாவது 2 (2புள்ளி)

• ஏனைய தொழிற்பாடுகள்.

* பொதுப்படுகடன் முகாமைத்துவம்
* வெளிநாட்டு செலாவணி முகாமைத்துவம்
* ஊழியர் சேமலாப நிதியத்தின் முகாமைத்துவமும் நிருவாகமும் (2புள்ளி)


(2) வணிக வங்கியின் குறிக்கோள்

* திரவத்தன்மையைப் பேணுதல்.
* இலாபம் உழைத்தல்.
* திரவத்தன்மை என்பது முதல் நட்டமின்றி விரைவாகப்பணமாக மாற்றிக் கொள்ளக்கூடிய ஆற்றலாகும். தமது வைப்புக்களைத் தமக்குப் பணம் தேவைப்படும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் வங்கியிலிருந்து மீளப் பெற்றுக்கொள்ள முடியும் என்ற பொதுமக்களின் நம்பிக்கையைப் பாதுகாப்பதற்கு வணிக வங்கிகள் திரவத்தன்மையை பாதுகாப்பதற்கு அவசியம். (1புள்ளி)
* வணிக வங்கியின் இலாபம் நோக்கம் என்பது வங்கிகடன் கொடுத்தல், முதலீடு செய்தல் என்பவற்றால் உழைக்கும் வட்டி வருமானத்திலிருந்து வைப்புக்களுக்காக வழங்கும் வட்டிச் செலவைக்கழித்துப் பெறப்படும் தேறிய வட்டிவருமானம். (1புள்ளி)
* வணிக வங்கள் மேற்குறித்த நோக்கங்களை அடைந்து கொள்ள முயற்சிக்கும் போது இரு நோக்கங்களுக்கிடையே முரண்பாடு தோன்றும்.
* திரவத்தன்மையை அதிகளவில் பேண வேண்டுமாயின் வணிக வங்கிகள் தமது சொத்துக்களில் பெருமளவானவற்றை திரவத் சொத்துக்களாக வைத்திருக்க வேண்டும். (1புள்ளி)
* மாறாக இலாம் உழைக்க வேண்டுமாயின் வணிக வங்கிகள் தமது நிதியினை இலாப சொத்துக்களில் முதலிட வேண்டும். அதவாது இலாபத்தை உழைத்தால் திரவத்தன்மையை பேணமுடியாது மாறாக திரவத்தன்மையை பேணினால் இலாபம் உமைக்க முடியாது. (1புள்ளி)
* எனவே இவ்விரு முரண்பட்ட நோக்கங்களுக்குமிடையில் ஒரு வணிக வங்கியானது சமநிலையைப் பேண வேண்டியுள்ளது.

(3) ஒரு பொருளாதாரம் நிறைதொழில் மட்டத்தில் காணப்படும் போது பொருட்கள் சேவைகளின் மோத்த கேள்வி அதிகரித்து பொது விலைமட்டம் அதிகரித்துச் செல்லல் கேள்வித் தூண்டல் பணவீக்கமாகும். (1புள்ளி)




kalvi.lk




(1புள்ளி)

* ஒரு பொருளாதாரத்தில் பொருட்கள் சேவைகளுக்கு உற்பத்தி செலவு அதிரித்து மொத்த நிரம்பல் குறைவடைவதனால் பொருட்கள் சேவைகளின் விலை மட்டம் அதிகரித்து செல்லல் செலவுத்தூண்டல் பணவீக்கமாகும். (1புள்ளி)




(4)

* இலங்கையின் நாணயக் கொள்கையின் முக்கிய கூறுகளில் ஒன்றான வட்டிவீத செல்வழியானது வங்கியின் பிரதான கொள்கை வீதங்களான துணைநில் வைப்பு வசதி வீதம், துணைநில் கடன் வசதி வீதம் என்பவற்றினால் உருவாக்கப்பட்டுள்ளது. (1புள்ளி)
* இவ்வட்டிவீதச் செல்வழியானது பணச்சந்தையில் ஓரிரவு வட்டிவீதத்தின் மேல் எல்லையையும் கீழ் எல்லையையும் உருவாக்கும். (1புள்ளி)
* வங்கியின் பணக்கொள்கை நிலைப்பாடு தொடர்பில் சமிஞ்ஞை வழங்கும் பொறிமுறையான இவ்வீதங்கள் ஒழுங்கான கால இடைவெளிகளில் மறுசீராய்வு செய்யப்படுகின்றது.
* சந்தையில் ஏலத்தின் முடிவின் பின்னரும் ஒரு பங்குபற்றுநரிடம் மிகை (பணம் திரவத்தன்மை இருப்பின் அவ்வாறன நிதிகளை துணைநில் வைப்பு வசதியின் கீழ் மீள் கொள்வனவு அடிப்படையில் நிதிகளைக் கடன் பெறலாம் அதன்படி இவ்வசதிகள் வட்டிவீதங்களின் பரந்த ஏற்ற இறக்கங்கள் ஏற்படுவதைக் கட்டுப்படுத்துகின்றன (2புள்ளி)

(5) அ) ரூபா 3000 மில்லியன்களால் மாற்றமடையும் (1புள்ளி)

ஆ) காசு மீளப் பெறலின் பின்னர் மிகை ஒதுக்கினளவு

உண்மையான ஒதுக்குகள் $= 16000 - 3000$

$=$ரூ. $13000$ (1புள்ளி)



kalvi.lk

தேவையான ஒதுக்குகள் $= 120000 - 3000$

$= 117000 \times 10\%$

=ரூ.11700

மிகை ஒதுக்கு = உண்மை ஒதுக்கு − சட்டப்படியான ஒதுக்கு

$= 13000 - 11700$

= ரூ *1300*

∴ புதிய கடனின் உச்ச அளவு = ரூ*1300*

*(1புள்ளி)*

08. (1) • நுகர்வில் போட்டித்தன்மை அற்றதும் விலக்குதல் விதிக்கு உட்பட்டாததும் சமூகத்தினால் கூட்டமாக நுகரப்படும் பண்டங்கள் தூய பொதுப்பொருள்களாகும். உ+ம் விதி வெளிச்சம் , தேசிய பாதுகாப்பு *(1புள்ளி)*

- உற்பத்தியின் போது அல்லது நுகர்வின் போது நேர்க்கணிய வெளிவாரி விளைவுகளை ஏற்படுத்தும் பண்டங்கள் மேன்மைப் பண்டங்களாகும். இவற்றை உற்பத்தி செய்வதனால் அல்லது நுகர்வு செய்வதனால் ஏற்படும் தனியார் நலனை விட சமூக நலன் கூடுதலாக காணப்படும். *(1புள்ளி)*

  உ+ம் : கல்வி, சுகாதாரம் நோய்த் தடுப்பு மருந்தேற்றல் *(1புள்ளி)*


(2) சமூக நலன் கருதி அருமையான வளங்களை ஒதுக்கீடு செய்வதில் விலைப் பொறியானது தோல்வியடைவதனைச் சந்தைதோல்வி எனலாம். *(1புள்ளி)*

காரணங்கள்

- பொதுப்பண்டங்கள் வழங்காமை.
- அரைப் பொதுப்பண்டங்கள் உத்தமமட்டத்தில் வழங்காமை.
- சமூகநலப் பண்டங்களை உத்தமமட்டத்தில் வழங்காமை.
- சமூகத்திற்கு தீங்கான பண்டங்களை வழங்குதல்.
- பொது வளங்களின் மிகைப்பாவனை
- வெளிவாரிகளை கவனத்தில் கொள்ளாமை.
- நிறைவில் போட்டியும் தனி உரிமையும். *(ஏதாவது 3 - 3புள்ளி)*

(3) பொருத்தமான உதாரணம் *(4புள்ளி)*


(4) உற்பத்தியில் எதிர்க்கணிய வெளிவாரிகள் காணப்படும் போது சமூகச் செலவு தனியார் செலவினை விட அதிகரித்துக் காணப்படும் இதன் விளைவாக தாராள சந்தை சமநிலையில் சந்தை வெளியீடு $(Qm)$ சமூக ரீதியில் உத்தம வெளியீட்டினை $(Qs)$ விட அதிகமாக காணப்படும். *(1புள்ளி)*




kalvi.lk

நுகர்வில் எதிர்க்கணிய வெளிவாரிகள் காணப்படும் போது தனியார் நலன், சமூகநலனை விடவும் அதிகமாக காணப்படும் எனவே $Qm > Qs$ காணப்படும்.

(1புள்ளி)




(5) சந்தைப் பொருளாதாரத்தில் ஏற்படும் தோல்வியை நீக்கும் பொருட்டு அரசதுறை தலையீடு செய்த போதிலும் அரச தலையீட்டின் காரணமாக முன்னரை விட வளங்கள் ஒதுக்கீடு செய்வதில் சமமின்மையும், செயற்திறனின்மையும் ஏற்படும் நிலை அரச தோல்வியாகும். (2புள்ளி)

இதற்கான காரணங்கள்

- அரசியலில் சுயவிருப்பம்
- அரசியல்மயமாக்கல்
- அதிகாரவாதம்
- ஊழல்களும் மோசடிகளும்
- இறுக்கத்தன்மை, அரசகட்டுப்பாடுகள்
- தீர்மானம் எடுத்தலில் தாமதம்
- அரசியல் கொள்கைகளில் தூர நோக்க சிந்தனையின்மை. (2புள்ளி)

09. (1)

- வளங்களை வினைத்திறனாக பங்கீடு செய்தல்.
- வருமானத்தையும் சொத்தையும் நியாமான முறையில் பங்கீடு செய்தல்.
- பேரினப் பொருளாதார உறுதியை ஏற்படுத்தல்.
- நிலைபேண்தகு அபிவிருத்தியை ஏற்படுத்தல்.

(2) வரிக்கட்டமைப்பு (2022)

வரி வருமானம் 88.5%

வருமான வரி 27%



kalvi.lk

கலால் வரி 17.3 %
துறைமுகம் மற்றும் விமான நிலைய அபிவிருத்தி தீர்வை 9.1%
ஏனைய வரி 9.1% (2புள்ளி)

**அல்லது**

வரி அரசிறை (2022) (7.4%)
மொ.2.2 இன் சதவீதமாக
வருமான வரிகள் 2.2%
பெறுமதி சேர் வரிகள் 1.9%
கலால் வரிகள் 1.4%
துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி தீர்வை 0.7%
இறக்குமதி தீர்வை 0.2 %
ஏனைய வரி 0.7%

- வருமான வரி அதிகரித்துள்மையால் மொத்த வரி அரசிறையில் நேர் வரி 2021ல் 23.3%ஆக இருந்து 2022ல் 30.5% ஆக அதிகரித்துள்ளது. (1புள்ளி) மற்றும் பெறுமதி சேர் வரி அதிகரித்துள்ளது. வரி வீதத்தில் மேற்கொள்ளப்பட்ட மேல் நோக்கிய திருத்தங்களின் காரணமாக வருமான வரி பெறுமதி சேர் வரி என்ப அதிகரித்துள்ளது. (1புள்ளி)

(3)

- எதிர்பாரத நிகழ்வுகளின் காரணமாக (யுத்த நிலைமை தேர்தல் போன்றவை) குறித்த காலத்தில் பெற்றுக் கொள்வதற்கு தவறும் சந்தர்ப்பங்களில் அதற்கான அனுமதியைப் பெறும் வரை, எதிரவரும் நிதியாண்டிற்கு அந்தந்த அமைச்சுக்களால் ஏற்றுக் கொள்ள வேண்டிய செலவுகளை, அரசின் ஒன்றிணைந்த நிதியிலிருந்து ஒதுக்குவதற்கான தற்காலிகமாக முன்வைக்கப்படும் செலவு அறிக்கையானது கணக்கு வாக்கெடுப்பு எனப்படும். (2புள்ளி)
- இடைக்கால வரவு செலவு திட்டம் என்பது ஒரு அரசாங்கமானது ஆட்சியிருக்கையில் முன்வைக்கும் வரவு செலவு திட்டமானது அங்கீகரிக்கப்பட்ட நிலையில் காணப்படும் போது அதன் பின்னர் ஆட்சியை ஏற்கும் அரசாங்கமானது தமக்கு தேவையான சீராங்களை உள்ளடக்கி மீண்டும் முன்வைக்கும் வரவு செலவு திட்டமாகும். (2புள்ளி)

(4) (1) அரசாங்க சேமிப்பு நடைமுறை கணக்கு மிகை ஆகும்.

அரசசேமிப்பு = அரசவருமானம் (கொடை நீக்கி) - நடைமுறைச் செலவு

$= 95000 - 67000$

$= 28$மில்லியன் ரூபா (2புள்ளி)

(2) மொத்த நிலுவை= அரச வருமானம் - அரச செலவு
(கொடை உட்பட)

$(95000 + 10000) - (67000 + 57000)$

$= 105000 - 124000$

$= -19000$மில்லியன் ரூபா (2புள்ளி)

(3) முதன்மை கணக்கு மீதி = மொத்த நிலுவை - வட்டிக்கொடுப்பனவு



kalvi.lk

$= -28000 - (-7000)$

$= -21000$ (2புள்ளி)

(4) அரசாங்க கொள்வனவு (பொருட்கள் சேவைகள் மீதான நடைமுறைச் செலவு)

நடைமுறை செலவு = அரசகொள்வனவு + வட்டிக் கொடுப்பனவு + நடைமுறை மாறல்

67000 = அரசகொள்வனவு + 7000 + 40000

67000 = அரசகொள்வனவு + 47000

67000 − 40000 = அரசகொள்வனவு

ரூ20000மில்லியன் = அரசகொள்வனவு

10. (1) 1. அமையச் செலவு

| நாடுகள் | தேயிலை | ஆடைகள் |
|---|---|---|
| இந்தியா | $\frac{150}{50} = 3$ | $\frac{50}{100} = 0.33$ |
| இலங்கை | $\frac{50}{10} = 5$ | $\frac{10}{50} = 0.2$ |

இந்தியா - தேயிலை
இலங்கை - ஆடை } 1புள்ளி

இந்தியா தேயிலை உற்பத்தியில் இலங்கையை விட குறைந்த செலவை கொண்டுள்ளது.
இலங்கை ஆடை உற்பத்தியில் இந்தியாவை விட குறைந்த செலவை கொண்டுள்ளது. } (1புள்ளி)

2. இந்தியா $1kg$ தேயிலைக்கு ஆடைகள் 3 ஐ விட கூடுதலாகவும் 5ஐ விட குறைவாகவும் இருக்க வேண்டும். (1புள்ளி)
இலங்கை ஆடைகள் 1 இற்கு தேயிலை 0.2ஐ விட கூடுதலாக 0.33ஐ விட குறைவாகவும் இருக்க வேண்டும். (1புள்ளி)

(2) தீர்வைத் தடைகள்
ஏற்றுமதி , இறக்குமதி மீதி வரி விதித்தல்.
தீர்வை அல்லத தடைகள்

- பங்கீட்டு முறை / சோட்டா முறை
- உள்நாட்டு உற்பத்தியாளர்களுக்கு மானியம் வழங்கல்
- குவித்தல்
- ஏற்றுமதித் இறக்குமதி கட்டுப்பாடு
- வெளிநாட்டு செலவாணிக் கட்டுப்பாடு (3புள்ளி)



kalvi.lk

(3) போட்டித்தன்மையின் நன்மை என்பது குறித்தவொரு பண்டத்தை நுகர்வோனுக்கு வழங்கும் போது ஏனைய போட்டியாளரை விட அதிக பெறுமதிகளை நுகர்வோனுக்கு கிடைக்க செய்வதாகும். (1புள்ளி)

- புத்தாக்கம்
- நுண்ணறிவு சொத்துக்களின் உடமை
- மூலதன உபகரணங்களின் உரிமை
- பங்கீட்டு நடவடிக்கை தொடர்பில் விசேட உரிமை
- சக்திவாய்ந்த உபாயமுறை
- வினைத்திறனான முகாமைத்துவம்
- பிரவேச தடை (3புள்ளி)

(4) குறிப்பிட்ட ஆண்டுக்கான பொருள் ஏற்றுமதி வருமானத்திற்கும் பொருள் இறக்குமதி செலவிற்கும் இடையிலான வித்தியாசம் பொருட்கள் கணக்கு நிலுவை ஆகும். (2புள்ளி)

வர்த்தக நிலுவை = பொருள் ஏற்றுமதி - பொருள் இறக்குமதி (1புள்ளி)

ஒரு நாட்டின் ஏற்றுமதி அலகு ஒன்றின் இறக்குமதி இயலளவை அளவிட்டுக் கூறும் ஒரு குறிகாட்டி (1புள்ளி)

பண்ட வர்த்தக மாற்றுவீதம் $= \frac{\text{ஏற்றுமதி விலைச்சுட்டெண்}}{\text{இறக்குமதி விலைச்சுட்டெண்}} \times 100$ (1புள்ளி)

(5) நேரடி முதலீடு
பட்டியல்படுத்தப்பட்ட முதலீடு
ஏனைய முதலீடுகள்
ஒதுக்கச் சொத்துக்கள் (4புள்ளி)



kalvi.lk

Education கல்வி අධ්‍යාපන

**எங்கள் குறிக்கோள்**

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page